**“அமெரிக்க-இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்”**
**இலங்கை வர்த்தக சபையின் 183 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்**
**2022, ஜூன் 30, வியாழன், பி.ப. 5:30 – பி.ப. 7:30**

தலைவர் கோவிந்தசாமி அவர்களே, பிரதம நிறைவேற்று அலுவலர் டி சில்வா அவர்களே, சபையின் கௌரவ உறுப்பினர்களே மற்றும் இலங்கை வர்த்தக சபையிலுள்ள நண்பர்களே - இன்று மாலை உங்களுடன் உரையாடுவதற்கு அழைப்பு விடுத்தமைக்கு உங்களனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மூன்று வருடங்களில் இந்த பொதுக்கூட்டத்தை அனைவரதும் நேரடிப் பங்குபற்றலுடன் நீங்கள் நடத்துவது இதுவே முதல் முறை என்பது எனக்குத் தெரியும் - மேலும் உங்கள் அனைவரையும் திரையில் பார்க்காமல் நேரடியாகப் பார்ப்பது எவ்வளவு அற்புதமான அனுபவம்! வர்த்தக சபையின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் தலைவர் பேசியதுபோன்றே, தொழில்முனைவு, வெளிப்படைத்தன்மை, நல்ல வணிக நிர்வாகம் மற்றும் வலுவான CSR (Corporate Social Responsibility) ஆகிய விடயங்களில் உங்கள் தலைமைத்துவத்தை நான் பாராட்ட விரும்புகிறேன். இந்த அறையில் இருக்கும் நீங்கள் அனைவரும் பார்வையாளர்கள் மட்டுமல்ல, இந்த நாட்டை சிறப்பானதாக மாற்றுவதற்காக இலங்கையில் முதலீட்டு மற்றும் வர்த்தக சூழலையும், ஜனநாயக நிறுவனங்களையும் பலப்படுத்துவதற்கு உண்மையிலேயே வாதிடுபவர்களாக இருக்கிறீர்கள்.

அமெரிக்க திறைசேரித் திணைக்களம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்டத் தூதுக் குழுவொன்று ஒரு முக்கியமான விஜயத்தை நேற்று நிறைவு செய்தது. திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளரான ரொபர்ட் கப்ரோத் மற்றும் இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளரான தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் பல்வேறு வகையான அரசியல் பிரதிநிதிகள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளைச் சந்தித்தனர். தேவைகளுடைய இலங்கையர்கள், தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இலங்கையர்கள், மற்றும் நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு எதிர்கால பொருளாதாரத்திற்கான திட்டங்களை வகுக்கும் இலங்கையர்கள் ஆகியோரிற்கு அமெரிக்கா உதவிசெய்வதற்கான மிகவும் செயற்திறன்வாய்ந்த வழிகள் தொடர்பில் ஆராய்வதே அவர்களது சந்திப்புகளின் நோக்கமாகும். இலங்கை மக்களின் துன்பங்களைக் குறைப்பதற்கும் மற்றும் பொருளாதாரத்தை இயலுமானவரை விரைவாக மீண்டும் வழமையான பாதைக்கு இட்டுச் செல்வதற்குமான உதவித் திட்டத்தை இறுதி செய்வதற்காக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் தனக்குக் கடன்கொடுத்தவர்கள் ஆகியோருடன் மிக விரைவாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியத்தையும் தூதுக்குழு அரசாங்கத்திற்கு வலியுறுத்தியது.

இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான எமது தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை இவ்விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்வதற்காகவும் மற்றும் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்காகவும் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் முன்னெப்போதையும்விட தற்போது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன. எம்மனைவருக்கும் தெரிந்தவாறு, இலங்கையானது தனது வரலாற்றில் மிகவும் சவாலான தருணங்களில் ஒன்றை எதிர்கொண்டுள்ளது. எரிபொருள் வரிசைகள் நீண்டு செல்வதையும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பொருட்களின் விலைகள் அதிகரிப்பதையும் நாம் அனைவரும் பார்த்திருக்கிறோம். மின்வெட்டுகளின் போது நாங்கள் இருளில் அமர்ந்திருக்கிறோம், அமைதியான போராட்டத்தின் மூலம் இலங்கையர்கள் தமது விரக்தியை வெளிப்படுத்துவதை

நாம் கண்ணுற்றோம். தினமும், நான் மேற்கொள்ளும் அனைத்து உரையாடல்களின் போதும் இலங்கையர்கள் தமது எதிர்காலம் மற்றும் அடுத்த தலைமுறையின் நல்வாழ்வு தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள கவலையினை என்னுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி இலங்கையின் சவால்கள் மிகவும் தீவிரமானவை. எனினும் அவை கடக்க முடியாதவை அல்ல.

சாமானிய இலங்கையர்களின் நலனுக்குப் பங்களிப்புச் செய்யும் நம்பமுடியாத புத்திசாலித்தனம் மற்றும் உத்வேகம் தரும் முயற்சிகள் பற்றிய உதாரணங்களை தினமும் நான் பார்க்கிறேன் மற்றும் கேள்விப்படுகிறேன். நான் உறுதியாக நம்பும் ஒரு விடயம் உண்டு, அதுதான் இலங்கை மக்களின் மீளும்தன்மை. இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு படைப்பாற்றல், தலைமைத்துவம், உறுதிப்பாடு மற்றும் சமரசம் ஆகியவை தேவைப்படுவதுடன் அதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையும் அவசர நடவடிக்கையும் அவசியமாகும். இலங்கையை மீண்டும் பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதைக்கு இட்டுச் செல்வதற்கான எமது கூட்டு முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கான நேரம் இதுவாகும். மிக அதிகமாக அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதாரத்தை உருவாக்குவதில் தனியார் துறையானது முன்னெப்போதையும் விட தற்போது ஒரு பாரிய பணியினை ஆற்றலாம். இன்றைய எனது கருத்துக்களில், இலங்கை தனது பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், அனைத்து இலங்கையர்களுக்கும் பயனளிக்கும் வகையில் நீண்ட காலத் தீர்வுகளை உருவாக்கவும் இலங்கை எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளை, துல்லியமாகக் கூறுவதாயின் ஐந்து விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்:

முதலில் கடன் நெருக்கடி தீர்க்கப்படுதல் அவசியம். சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று கடன் மற்றும் சட்ட ஆலோசகர்களை பணியமர்த்துவதற்கும், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். அவை நேர்மறையான நகர்வுகள். எனினும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் இலங்கையை மீண்டும் இட்டுச்செல்வதற்கு ஆற்றவேண்டிய பணிகள் இன்னும் நிறையவே உள்ளன. பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால், இது இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின்17ஆவது தீர்வுப்பொதியாக அமையும். இது கடைசியானதாக இருப்பதை உறுதி செய்வோம். இலங்கை கைக்கொள்ளும் சீர்திருத்த நடவடிக்கைகள் இந்த நெருக்கடியின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதாக அமைதல் வேண்டும். இதனால் இறுதியாக நாடு அனைத்து இலங்கையர்களின் நலனுக்காக நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன தொடர்பான சர்வதேச தராதரங்களை உள்ளடக்கிய நிலையான மற்றும் தீர்க்கமான கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளும். தற்காலிகமான மாற்று நடவடிக்கைகளுக்கு இனி இடமில்லை.

இலங்கை கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி சீர்திருத்தங்களில் ஈடுபடுகையில், அனைத்து கடன் வழங்குநர்களும் சமமாக நடத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும். IMF நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் கீழ் செயற்படும் பல நாடுகள் பூர்த்தி செய்யவேண்டிய மிக முக்கியமான கூறுகளில் அதுவும் ஒன்றாகும்.

இரண்டாவதாக, இலங்கை தனது மக்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்தல் அவசியம். பாலின சமத்துவத்துடன் கூடிய பணியாளர்கள், மெய்யான தலைமைத்துவ வகிபாகங்களில் பெண்களையும் கொண்டிருத்தல் என்பன இன்றியமையாததாகும். இந்த அறையை நோக்கினால், வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்கள் அதிகம் தேவை என்பதும் எங்கள் பணி இன்னும் நிறைவடையவில்லை என்பதும் தெளிவாகிறது. பெண்கள், நாடு முழுவதிலுமுள்ள பல கிராமங்கள்

மற்றும் நகரங்களில் இயங்கும் தமது சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதியுதவிக்கான சமமான அணுகல்களைக் கொண்டிருத்தல் அவசியம். இலங்கையானது உயர் கல்வியறிவுடைய, படைப்பாற்றல் கொண்ட மற்றும் திறமையான பணியாளர்களைக் கொண்ட நாடு எனும் சரியானமுறையில் பெற்றுக் கொண்ட தனது நற்பெயரைத் தக்கவைத்துக் கொள்ளவும் அதை மேலும் விருத்திசெய்யவும் உதவும் வகையில் அனைத்து இலங்கையர்களும் தரமான பொது ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சிக்கான வாய்ப்பினைப் பெறுவது இன்றியமையாததாகும். சமாதானத்தினையும் ஸ்திரத்தன்மையினையும் கட்டியெழுப்புவதற்காக, இலங்கையானது சட்டத்தின் ஆட்சி, அனைவரது மனித உரிமைகளுக்கான மரியாதை, சமமான பிரதிநிதித்துவம் மற்றும் வெளிப்படைத் தன்மையுடைய அரசாங்கம் போன்ற ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்தல் அவசியமாகும். இந்த ஜனநாயக விழுமியங்கள் வீழ்ச்சியடையும் போது, தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் சுதந்திரமான பத்திரிகைகள் என்பன அரசாங்கத்தினை அதன் தலைமைத்துவம் மற்றும் இந்த நாட்டினை வழிநடாத்துதல் ஆகிய விடயங்களுக்காக பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்துதல் அவசியமாகும். அமைதியான முறையில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு அனைத்து இலங்கையர்களும் கொண்டுள்ள அவர்களது உரிமை நிலைநாட்டப்படுதல் அவசியம் மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிச்செல்லும் கலாச்சாரம் நிறுத்தப்படுதல் வேண்டும். நல்லிணக்கச் செயன்முறையில் பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காக வெளிப்படைத்தன்மையுடன் இயங்கும் சுயாதீன நிறுவனங்களை பேணிப்பாதுகாக்குமாறும், சர்வதேச தராதரங்களுக்கு இணங்கியதாக பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆக்குவதற்காக அதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக சீர்திருத்தங்கள் உட்பட, அனைத்து இலங்கையர்களும் நியாயமான நீதி முறைமைக்கான அணுகலைக் கொண்டிருப்பதை உறுதி செய்யுமாறும், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவதற்காக சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறும் நாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம். மேலும் குடியுரிமை வெளியினை பாதுகாக்குமாறும், சிவில் சமூக அமைப்புகளை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்குமாறும் அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம். இலங்கையின் அனைத்து மக்களுக்கும் நிலைபேறான மற்றும் செழிப்பான ஒரு பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக பொருளாதார சீர்திருத்தமானது அரசியல் சீர்திருத்தத்துடன் இணைந்ததாக இருத்தல் அவசியமாகும்.

மூன்றாவதாக, தனியார் துறையானது செழித்து வளர்வதற்கு வணிகச் சூழல் மற்றும் முதலீட்டுக் கட்டமைப்புச் சூழல் என்பன மேம்படுத்தப்படுதல் வேண்டும். சிரமமான அலுவலக நடைமுறைகளைக் குறைப்பதும், முதலீட்டாளர்கள் நாட்டிற்கு மிகவும் தேவையான வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டுவருவதற்காக இலங்கையில் வாய்ப்புகளைத் தேடுகையில் அவர்களுக்கு நியாயமற்ற தடைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமாகும்.

2020ஆம் ஆண்டில், இலங்கையில் அமெரிக்கா மேற்கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடு 13 மில்லியன் டொலர்களாகும். அது அந்த நேரத்தில் இந்நாட்டில் அமெரிக்காவின் மொத்த முதலீட்டை 274 மில்லியன் டொலர்களாக அதிகரித்தது. ஐந்தாண்டுகளுக்கு முன் 2015ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட 17 மில்லியன் டொலர்களுடன் இதை நீங்கள் ஒப்பிட்டால், இவ்வாறான முதலீடுகள் மேலும் அதிகரிப்பதற்கு இடமுண்டு என நான் கூறுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன். அரசாங்க முடிவுகளை மேற்கொள்வதில் நிலையான தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை என்பன தொடர்பான கரிசனைகள், மற்றும் அவையனைத்திற்கும் மேலாக, எதிர்வுகூற இயலாதிருத்தல், ஆகிய விடயங்களே வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) வேகமாக வளராமைக்கு முதன்மையான காரணங்களாகும். ஒரு

சமநிலையான களத்தினையே எமது நிறுவனங்கள் விரும்புகின்றன. ஒரு நல்ல ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு. அவர்களின் மத்தியஸ்தம் மற்றும் அவர்களின் ஒப்பந்தங்கள் மதிக்கப்படும் எனும் நம்பிக்கை. அவ்வாறான ஒரு வலுவான முதலீட்டுச் சூழல் உங்களிடம் உள்ளபோது, நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரும். எவ்வாறாயினும், இதை உண்மையாக்குவதற்கு, வெளிநாட்டு நேரடி முதலீட்டினை மேற்கொள்வதற்கு பெரும்பாலும் தடையாக இருக்கும் லாபமற்ற அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை சீர்திருத்துவதற்கான கடினமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியேற்படும். அதிகரித்த தனியார் துறையின் பங்கேற்பு மற்றும் எரிசக்தி ஆதாரங்களின் பன்முகத்தன்மையை அனுமதிக்கும் வகையில் நாட்டின் மின்சாரத் துறையை நவீனமயமாக்குவதற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மேற்கொண்ட சமீபத்திய முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்.

நான்காவதாக, பசுமைத் தொழிநுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறுவதற்கு இந்த தருணத்தை இலங்கை பயன்படுத்துதல் அவசியமாகும். காலநிலை நடவடிக்கைகள் தொடர்பான ஒரு பரந்த கொள்கையின் ஒரு பகுதியாக 2030 ஆம் ஆண்டளவில் மின்சார உற்பத்தியில் 70 வீதத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு இலங்கை கொண்டுள்ள இலக்கானது எமக்கு ஊக்கமளிக்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிபொருள்களுக்கு மாற வேண்டிய நேரம் இதுவே! என்பதே எரிபொருள் நெருக்கடி எமக்குக் கற்றுத் தந்த பாடமாகும். இது அமெரிக்க நிறுவனங்களிடமிருக்கும் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட செயற்திட்ட நிதிகளுக்கான அணுகல் ஆகியவற்றிலிருந்து இலங்கை பயனடையும் ஒரு விடயப்பரப்பாகும். தூய்மை எரிசக்தி என்பது கடந்த ஆண்டு எமது G7 பங்காளர்களுடன் இணைந்து ஜனாதிபதி பைடன் அறிவித்த Build Back Better World பங்காண்மையில் கவனம் செலுத்தப்படும் ஒரு முன்னுரிமை விடயமாகவும் உள்ளது.

காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற அபரிமிதமான நிலைபேறான ஆற்றல் மூலாதாரங்களை இலங்கை கொண்டுள்ளது, எனினும் இந்த வளங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தும் வகையில் அதன் மின்சக்தித் துறையானது அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதனால்தான் இலங்கையின் மின்சக்தித் துறையை நிலைபேறான மற்றும் நம்பகத்தன்மையுடைய சந்தை அடிப்படையிலான உந்துதல் கொண்ட அமைப்பாக மாற்ற உதவுவதற்காக 19 மில்லியன் டொலர் USAID Sri Lanka Energy Program எனும் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். இச்செயற்திட்டமானது மூலதனத்திற்கான அணுகலை எளிதாக்குவதுடன் அரசாங்கத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளுக்கு உதவியாக முதலீடுகளை ஈர்க்கும். USAID இன் Transaction Advisory Fund நிதியமானது மிதக்கும் சூரியக்கலன் நிறுவல்களின் போட்டித்தன்மைவாய்ந்த அபிவிருத்திக்கு உதவுவதற்காக 850,000 டொலர்களை வழங்கியுள்ளது. இச்செயற்திட்டமானது நாட்டில் எரிசக்தி வினைத்திறன் மற்றும் தேவை முகாமைத்துவ நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குப் பணியாற்றுவதுடன் உயர்தர தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதையும் ஊக்குவிக்கும்.

இலங்கையின் மின்சார வாகனத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்காக, VEGA Innovationsஇற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக நாங்கள் சமீபத்தில் அறிவித்தோம். இது மின்சார "tuk tuks" உள்ளிட்ட மின்சார வாகனங்களை ஊக்குவிக்கும் VEGA Innovations இன் முயற்சிகளை ஆதரிப்பதுடன், ஒரு தேசிய வாகன மின்னேற்றல் வலையமைப்பை உருவாக்குவதற்கும் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட பற்றரிகள் மற்றும் இன்வேட்டர்களைத் தயாரிப்பதற்கும் உதவிசெய்யும். அவற்றுள் ஒன்றை நானே ஓட்டி அதன் வினைத்திறனைக் கண்டு வியந்தேன்; கொழும்பின் தெருக்கள் இவ்வகையான tuk tuks வாகனங்களால் நிறைந்திருக்கும் ஒரு நாளை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இறுதியாக இலங்கையின் மின்சாரத்

துறையானது சந்தை அடிப்படையில் ஊக்குவிக்கப்படும் ஒரு அமைப்பிற்கு மாற்றமடைவதானது, இலங்கையின் தனியார் வர்த்தகங்களுக்கும் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் அதிக வாய்ப்புகளை வழங்கும் அதேவேளையில் இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவித்து அதன் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் உதவி செய்யும். பொருளாதார ரீதியாக சந்தேகத்திற்குரிய உட்கட்டமைப்புச் செயற்திட்டங்களை விடவும் இவ்வகையான நிதியுதவியானது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீண்ட கால, நிலைபேறான திறன் அபிவிருத்திக்கு அதிகளவான பங்களிப்பை வழங்குகிறது.

இறுதியில் ஐந்தாவதாக - இது எனது குழுவும் நானும் உண்மையிலேயே உற்சாகமடையும் ஒரு விடயப்பரப்பாகும் - இலங்கை அமெரிக்காவிற்கான தனது ஏற்றுமதிகளையும் முதலீடுகளையும் விருத்தி செய்ய முடியும். இலங்கையின் மிகப்பெரிய தனிநாட்டு ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குகிறது, எனவே இவ்விடயத்தில் இலங்கையின் செழிப்பிற்கு நாம் வழங்கும் பங்களிப்புகள் ஈடு இணையற்றவையாகும். எமது இருதரப்பு வர்த்தக உறவுகளின் பெறுமதியானது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் மூன்று வீதமாகும். எமது மதிப்பீடுகளின்படி, அமெரிக்காவுக்கு ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் இங்கு குறைந்தது 180,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். இந்த வகையான பொருளாதாரப் பங்காண்மையே நாம் அனைவரும் விரிவுபடுத்துவதற்கு விரும்பும் பொருளாதாரப் பங்காண்மையாக அமைதல் வேண்டும். அமெரிக்காவில் முதலீடு செய்வதென்பது இலங்கையின் தனியார் துறையினருக்குள்ள மற்றொரு வாய்ப்பாகும். அமெரிக்காவில் முதலீடு செய்யும் வணிகங்கள், அது எவ்வகையான தொழில்துறையாக இருப்பினும், இவ்வுலகிலுள்ள மிகவும் திறந்த சந்தைகளில் ஒன்றிலிருந்து போட்டித்தன்மைவாய்ந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றன. 20 டிரில்லியன் டொலர் பெறுதியுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 325 மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்டுள்ள அமெரிக்காவானது இப்பூமியில் மிகப்பெரிய நுகர்வோர் சந்தையை வழங்குகிறது. அமெரிக்காவில் மேற்கொள்ளப்படும் புத்தாக்கத்தினை, கண்டுபிடிப்பு மற்றும் உத்வேகத்திற்கான ஒரு செழிப்பான சூழல் அமைப்பிலிருந்து பயனடையும் – மற்றும் அதற்குப் பங்களிப்புச் செய்யும் - ஒரு உலகளாவிய தொழில்முயற்சியாக மாற்றுவதற்கு அனைத்து அளவிலான நிறுவனங்களும் உதவுகின்றன.

இது இலங்கை வரலாற்றில் ஒரு தீர்மானமிக்க தருணமாகும், மற்றும் ஒற்றுமை என்பது முன்னெப்போதையும் விட முக்கியமாகத் தேவைப்படும் ஒரு நேரமுமாகும். ஒற்றுமை என்றால் நாம் அனைவரும் எல்லா நேரங்களிலும் ஒத்துப் போவது என்பது அர்த்தமல்ல. எமக்கு முன்னாலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவதும் அதற்காக ஆக்கபூர்வமாக எம்மால் செய்ய இயலுமானதைச் செய்வதுமே அதன் பொருளாகும். இலங்கைப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு உதவுவதற்காகவும், உள்நாட்டுத் திறனை அதிகரிப்பதற்காகவும், இலங்கை மக்களின் செழிப்பு மற்றும் நல்வாழ்வுக்கு உதவுவதற்காகவும் வெளிநாட்டு உதவிகள், கடன்கள், வர்த்தக வாய்ப்புகள் மற்றும் இருவழிக் கல்விப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை எழுபது ஆண்டுகளாக அமெரிக்கா வழங்கியுள்ளது. இந்த சவாலான காலங்களில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்குத் துணையாக நிற்கிறது. கடந்த சில வாரங்களாக, இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு 120 மில்லியன் டொலர் நிதியளிப்பினையும், இலங்கையின் பால் உற்பத்திக் கைத்தொழிலுக்கு 27 மில்லியன் டொலர்களையும் மற்றும் இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் பயனடைவதற்காக புதிய மனிதாபிமான, தொழிநுட்ப மற்றும் உணவுப் பாதுகாப்பு உதவிகளாக

30 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட தொகையினையும் நாம் அறிவித்துள்ளோம். மற்றும் எதிர்வரும் மாதங்களில் அந்த உதவிகளை மேலும் அதிகரிக்க நாம் எதிர்பார்க்கிறோம். இலங்கையின் செழிப்பிற்கான ஒரு நண்பராகவும் பங்காளராகவும் அமெரிக்கா விளங்குகிறது. நாம் பகிர்ந்துகொள்ளும் பொதுவான எதிர்காலத்தையும் தற்போதைய சவால்களிலிருந்து வெளியேறுவதில் வெற்றியையும் நான் எதிர்பார்க்கிறேன். இந்த சவாலான காலங்களில் தப்பிப்பிழைப்பது குறித்து தலைவர் பேசினார். அதை ஒரு படி மேலே கொண்டு சென்று, இதில் தப்பிப்பிழைப்பது மட்டுமன்றி இலங்கை நாடானது இந்த நெருக்கடியின் ஊடாக மேலும் பலமானதாகவும், சிறப்பானதாகவும் மாறவும், செழித்து வளரவும் வேண்டும் என்று கூற நான் விரும்புகிறேன். அது ஒரு பயமுறுத்தும் விடயமாகத் தோன்றலாம், எனினும் அதைச் செய்ய முடியும் என நான் நம்புகிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கை செழித்தோங்குவதை உறுதி செய்வோம்.
நன்றி.